මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

# நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள்
- உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பங்குத் தரகர்கள்
- பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் (உதாரணம் - நடமாடும் பணத்தொழிற்படுத்துநர்கள், பணம் அனுப்புநர்கள்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிறுவனங்கள் 2006இன் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தமது வாடிக்கையாளர்களுடனான வியாபாரத் தொடர்புகளில் ஈடுபடுவதற்கு முன்னர் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் மேற்கொள்ளுவதற்கு வேண்டப்பட்டுள்ளன. அதற்கமைய, அவர்களது வாடிக்கையாளர்களினால் தோற்றுவிக்கப்படும் பணம் தூயதாக்கல் அத்துடன் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பீடு செய்து முகாமை செய்யும்பொருட்டு 2016இன் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன. குறைந்த பட்சம் பின்வரும் தகவல்கள் வாடிக்கையாளர்களினால் வழங்கப்பட வேண்டும்.

- அடையாள ஆவணத்தில் தோன்றுகின்றவாறு முழுப்பெயர்;
- வாடிக்கையாளரின் நிழற்படத்தைக் கொண்ட தனிப்பட்ட அடையாளங்காணல் ஆவணம் (உதாரணம்: தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி உரிமம்);
- கணக்கின் நோக்கம்;
- வருவாய் மூலங்கள்;
- எதிர்பார்க்கப்படும் மாதாந்த புரள்வு;
- எதிர்பார்க்கப்படும் கொடுக்கல்வாங்கல் முறை (உதாரணம் - காசு, காசோலை போன்றன) அத்துடன்
- எதிர்பார்க்கப்படும் இணைத்தரப்பினர்களின் வகை (ஏற்புடையதாயின்)

நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர் பற்றிய அடையாள மற்றும் ஏனைய அடிப்படை விபரங்களைச் சேகரித்தல் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றாகும். எனவே, அனைத்து நிதி நிறுவனங்களினதும் வாடிக்கையாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.


**மேலதிகத் தகவல்களுக்கு,**
**தயவுசெய்து தொடர்புகொள்ளவேண்டியது**

பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

011-2477125 011-2477692 @ fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk